சில நூற்றாண்டுகளாக இவ்வுலகில் மிகப்பெரிய அளவில் அறிவுப் பெருக்கமும், தொழில் நுட்ப முறைகளும், பிற சாதனை முறைகளும் தோன்றி வளர்ச்சி பெற்றுள்ளன. இந்தியாவும், எல்லாத் துறைகளிலும், பிறநாடுகளோடு ஒப்பிடும் போது சிறப்பான வளர்ச்சியே கண்டுள்ளது. இருப்பினும் அதன் கல்விநிலை எப்படி உள்ளது? என்பதை ஆராய்வதற்கே இக் கட்டுரை உதயமாகியது. சுவாமி விவேகானந்தர், ''நமக்கு வாழ்வை எழுப்பித் தருகிற, மனிதனை மனிதனுக்குகிற, நன்னடத்தையைத் தோற்றுவிக்கின்ற கருத்துக்களை அளிக்கும் கல்வியே வேண்டும்'' என்றார். குறிப்பாக மனிதனை மனிதனுக ஆக்குகின்ற கல்விதான் உண்மையான கல்வி. இந்தியாவில் உள்ள கல்வி முறை நிலைமையும், கல்விமுறை சிறப்பாக அமையும் முறையும் இங்கு ஆராயப்பட்டுள்ளன.

சிந்தனை தரும் கல்வி :

பொதுவாக இந்தியாவின் கல்வி முறை சிந்தனைக் கல்வியாக அமையவில்லை என்பது வெளிப்படை. அனைவரும் மனப்பாடம் செய்து தேர்வில் தேர்ச்சி பெற முடியும் என்ற இழிந்த நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் இந்நாட்டில். எதையும் சிந்தித்து நோக்கும் திறமையை ஊட்டுவதாகவோ அல்லது ஏற்கனவே உள்ள ஆற்றலை வளர்ப்பதாகவோ கல்வி முறை இல்லை. இந்தியக் கல்விமுறை மேலைநாட்டு முறைகளையே அடிப்படையாகக் கொண்டுள்ளது.

ஒரு நாட்டிலுள்ள சிந்தனையாளர்களின் எண்ணிக்கையைப்பொறுத்தே அந்நாடு வளர்ச்சியும், வாழ்வும், உயர்வும் பெறும் எனவே. இந்தியக் கல்விமுறை சிந்தனை சக்தியை அடிப்படையாகக் கொண்ட கல்விமுறையாக அமைந்துவிட்டால், உலகிலேயே எல்லாத்துறைகளிலும் தன்னிறைவு பெற்ற நாடாக வளரும் என்பதில் ஐயமில்லை.

தாய்மொழிக் கல்வி :

ஒவ்வொருவருக்கும் அவரவர் தாய்மொழியே சிறந்த உயர்மொழியாகும். தாய் மொழிதான் கருத்துக்களை எளிதாக, தெளிவாக வெளிப்படுத்த உதவுகிறது. அன்னிய மொழிவாயிலாகப் பதினைந்து மணித்துளிகளில் படித்தறியும் கருத்தைத் தாய் மொழியில் ஐந்து மணித்துளிகளில் படித்தறிந்து விடலாம். அப்படிப்பட்ட தாய் மொழியை அடிப்படையாகக் கொண்டுதான் ஒருநாட்டின் கல்விமுறை அமைதல் வேண்டும். ஆனால் நம் இந்தியக் கல்வி முறை தாய்மொழியைவிட, வேற்றுநாட்டு மொழியில் அக்கறைகொண்டு, அதையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுதந்திரம்பெற்று 33 ஆண்டுகள் ஆகியும், நம்

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FORM :

SARAVANA TRADERS,

COTTON WASTE MERCHANTS,

COTTON MARKET,

RAJAPALAYAM.

Phone No. 2628

Scanned by TapScanner

நாட்டிற்குரிய தனித் தன்மையில் கல்வி முறை வகுக்கப்படவில்லை.

ஆங்கிலம் என்னும் உலக மொழி நமக்குத் தேவைதான். ஆனால் அதே அளவிற்காவது தாய்மொழி கற்பிக்கப்பட வேண்டாமா? ஆரம்பப்பள்ளிகள் முதல் மேற்படிப்புக் கல்வி நிலையங்கள் வரை, தாய்மொழியைக் கட்டாயப் பாடமாக ஆக்குதல் வேண்டும். ஒரு பட்ட வகுப்பில் 4 பாடப் பிரிவுகள் இருந்தால் அவற்றில் 2 தாய்மொழியிலும், 2 ஆங்கிலமொழியிலும் அமைக்கலாமே! ஆங்கிலம் மட்டும் இருந்தால்தான் நம்மவருக்கு அறிவு பெருகுமா? இல்லையே.

கூட்டுக்கல்வி :

கூட்டுக்கல்வி என்பது ஆணும், பெண்ணும் ஒரே பள்ளியிலோ, கல்லூரியிலோ ஒன்றுகச் சேர்ந்து ஒரே விதமான பாடத் திட்டங்களின்படி படித்தல் என்பது பொருள். தற்போது இந்தியாவின் எல்லாக் கல்வி நிலையங்களிலும் கூட்டுக் கல்வி (நோய்) பரப்பப்பட்டு வருகிறது. இந்தியக் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் இது ஒவ்வாததாகும்.

உள்ள, உடல் அமைப்புக்களில் ஆண்களும், பெண்களும் வேறுபட்டவர்கள். அவர்கள் பருவமெய்தும் வயதும் வேறுபட்டது. அடிப்படைக் கல்வி, நடுத்தரக் கல்வி பயிலும்போது அவர்கள் ஒன்றுகக் கற்பதை யாரும் தடை கூறவில்லை. அதற்கடுத்த நிலையில் கல்லூரி அளவிலான கல்வி முறையில் கருத்து வேறுபாடு ஏற்படுகிறது. இத்தகைய கல்வி முறையால் சிலவகை நன்மை, தீமைகள் ஏற்படுகின்றன. சூழ்நிலைகளின் காரணமாகவும், சமூகப் பழக்க வழக்கங்களின் காரணமாகவும், இளம்சமுதாயத்தினரின் உள்ளத்தில் ஏற்படும் உணர்வுகளால், நன்மைகளை விடத் தீமைகள் மிகுதியாகும்.

ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே மாதிரியான பாடத்திட்டம் இருந்தால் அது பெண்களின் மன வளர்ச்சிக்கு பொருந்துவதாக இல்லை; இயல்பாக கல்வியின்மேல் நாட்டம் இல்லாமல் போகும் வாய்ப்பும், நல்லொழுக்கத்தை இழக்கும் நிலையும் உள்ளது. பழைய உலகத்தின் மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும் மறைய வேண்டியதுதான். ஆனால் அவை இருந்த இடத்தில் அதற்கேற்பப் பண்பாடு நிரம்ப வேண்டும் அல்லவா? இதற்கு உளவியலில் மாணாக்கரை அணுகும் ஆசிரியர் தேவை. அவ்வாறு ஆசிரியர் செயல்பட முடியாத நிலை உள்ளதால், ஆண்களுக்கும், பெண்களுக்கும் தனித்தனிக் கல்வி நிலையங்களே பொருத்தமானது.

மாணாக்கரும், அரசியலும் :

அரசியல் அறிவும், அதில் ஈடுபடுவதும் வேறுபாடு உடையதாகும். கல்வி பயிலும் பள்ளி, கல்லூரி, மாணவ, மாணவிகளே வீண் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் இழிநிலை இந்தியாவில் உள்ளது. அரசியல் ஈடுபாட்டால் கல்வி கற்காமற் செய்து, மாணவர்களின் எதிர்கால வாழ்வினைச் சிதறடித்த பின், அதைச் செய்த அரசியல்வாதிகள் அவர்களின் துன்ப நிலையைக் கண்ணெடுத்தும் பாரார்.

"அரசியலைப் பற்றி அறியலாம், ஆனால் அதில் ஈடுபாடு கூடாது" என்ற கருத்தில், அரசியல் ஈடுபாடு அல்லாத

Scanned by TapScanner

WITH BEST COMPLIMENTS FROM :

Phone No. 478

RAJAN & CO.,

1, GIRLS SCHOOL STREET,

SIVAKASI.

Manufacturers of :

Offset Negatives

★

Film Negatives

★

Blocks

★

Rubber Stamps

and

Cinema Slides

Scanned by TapScanner

அளவில் கல்வி என்னும் அருமருந்து ஒருவனுக்குச் செலுத்தப்பட்டால், அது தன்னை உண்டவனைப் பாதுகாக்கும். அந்த நிலை இந்நாட்டில் இல்லையே! அவ்வாறு இருந்தால், ''கல்வி கற்கையில் கசப்பு, கற்றபின் அதுவே இனிப்பு'' என்ற நன்மொழிப்படி ஆகிவிடுமே!

குடிமைப்பயிற்சிக் கல்வி:

நம் நாட்டில் தேசப்பற்றை மையமாக வைத்து, கல்வி கற்பித்து எதிர்காலச் சந்ததியினரை தேசபக்தர்களாக உருவாக்க வழி வகுக்கப்படவில்லை. ''இன்று ஏடு தூக்கும் பிள்ளையே நாளை நாடு காக்கப் போகிறான்'' என்பது பொன்மொழி. அப்படிப்பட்ட ஏடுதூக்கும் பிள்ளை, தனக்குள்ள சில தேசியக் கடமைகளை உண்மைத் தன்மையில் நிறைவேற்ற எப்போதும் காத்திருக்கும் பக்குவம் பெறவேண்டுமல்லவா? அதற்காக, தேசிய நடைமுறை பற்றிய தெளிவு நோக்கு, தேசச் சட்டத்திற்குக் கீழ்ப்படிதல், ஒற்றுமையாக வாழ்தலின் பண்புகள், அதன் நலன்கள் வாய்க்கப் பெற்றவர்களாக மாணவர்களை உருவாக்க வேண்டும்.

நாட்டின் குடிமகன் தனது இன்னுயிரைக் கொடுத்தேனும், தனது தாய்நாட்டைப் பாதுகாக்கும் திறமை பெற்றவனாக இருக்க வேண்டும். இத்தகைய சிறந்த பயிற்சிகளை உள்ளடக்கிய கல்விமுறையை இந்தியாவில் அமைத்துத், தேசபக்தி ஊட்டலாமே! மன வளர்ச்சியோடு உடலும் வலுப்பெற கட்டாய உடற்பயிற்சி முறைகளையும் ஏற்படுத்தலாமே!

தேசிய முதியோர் கல்வி :

முதியோர்க்கு (அல்லது வயது வந்தோருக்கு) கல்வி கற்பிப்பவர்கள், அவர்களை ஒன்றும் அறியாதவர்கள் என்று எண்ணுமலும், அவர்களைத் தாழ்ந்தவர்களாக மதிப்பிடாமலும் இருப்பது இக்-கல்விமுறை வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாக அமையவல்லது. 1978ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 2-ஆம் நாள் காந்தி பிறந்த நாளன்று புதிய திட்டத்தோடு துவங்கிய இக்கல்வித் திட்டம் இரு (ஆண்டு) அடிகளையே கடந்துள்ளதால் இதன் வெற்றியை நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டு விட முடியாது. இத்திட்டத்தை வெற்றி பெறச் செய்ய சில கல்லூரிகள் செயல்படும் நிலை போற்றுதற்குரியது. ஆனால் இந்தியக் கல்வித்துறையினர் கவனிக்க வேண்டியதொன்று உண்டு; இம்முதியோர் கல்வித்திட்டத்தின் செயல்பாடு ஆண்டாண்டுக் காலமாகத் தொடராமல் இருப்பதற்கு வழி வகுக்க வேண்டும். அதாவது கல்வி கற்காமல் இளமையைப் போக்குபவர்களின் எண்ணிக்கையை முழு அளவில் நிறுத்த முயலவேண்டும்.

தொழிற்கல்வியும், கலைக் கல்வியும்:

தொழிற்கல்வி, ஒருவன் பிற்காலத்தில் தொழில் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு வாழ்வதற்காகவென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளது. கலைக்கல்வி இந்நோக்கத்தைச் சிறிதளவே எட்டிப்பிடிக்க முடிகிறது. தொழிற்கல்வி முறையில் சிந்தனைமுறைக் கல்வியையும், உள்ள வளர்ச்சிக்கான கல்விமுறைகளையும் அளிப்பதில் இந்தியா ஏற்றம் காணவில்லை அல்லது அதற்காகக் கல்வித் திட்டம் இதுவரை அமைக்கப்படவில்லை. பொதுவாக இக்கல்வி நிலையங்களில் படிக்க வருபவர்கள், பிற்காலத்தில் தொழில் உறுதியாகக் கிடைக்கும் என்றே

Scanned by TapScanner

தருகின்றனர். கல்விக்கல்வி பயில வரும் வர்களில் பெரும்பாலோர், "எப்படிப்பட்ட வாழ்வு வாழவேண்டும் என்பதைக் கற்பிக்கும் கல்வி இது தான்" என அதனை நினைப்பதில்லை.

எடுத்துக்காட்டாக, வரலாற்றுத் துறை மாணவன் ஏதோ படித்துப் பட்டம் பெறவேண்டும் என்று எண்ணுகிறானே தவிர, "அசோகர் ஏன் அகிம்சையைக் கடைப்பிடித்தார்?", "அக்பர் ஏன் இராஜபுத்திரர்களோடு நட்புக் கொண்டார்-நாடு ஒற்றுமையாக இருப்பதற்குத் தானே"! என்றெல்லாம் சிந்திப்பதில்லை.

தேர்வு முறைகள் :

இன்றைய இந்தியக் கல்வித் தேர்வுகள் வெறும் ஏட்டுத் தகுதிகளைத்தான் அளிக்கின்றன. இத்தேர்வு முறைகள் விடைகளை மனனம் செய்ய மாணக்கரைத் தயாராக்குவதாக அமைகிறது. திறனாய்வு முறையும், கற்ற கல்வியில் சிந்தனையும், கடுகளவும் இல்லாத நிலையை மாணக்கர் அடைகின்றனர். இந்நிலையை நீக்குவதற்கேற்ப பாடத்திட்டம் அமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட வேண்டும். ஒவ்வொரு வருடைய தனித்திறன், சிந்தனைத் திறன்களை அடிப்படையாகக் கொண்டதாக அமைதல் சிறப்புடையதாகும்.

பொதுக்கண்ணோட்டம் :

கல்வி நிலையங்களில் மேற்படிப்புப் படித்து முடித்தவுடன் வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கை இல்லாத அளவிற்கு வேலை இல்லாத் திண்டாட்டம் இந்த இந்திய நாட்டில் பெருகியுள்ளது. திறமைமிக்கவர்கள் தாங்கள் பிறந்த நாட்டில் குறைபாடு கருதி, வேற்றுநாட்டுக்குச் செல்லும் அறிவு வடிகால் (Brain Drain) நிலையால் முன்னேறும் நாடான இந்தியாவிற்கு கடுமையான இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

மருத்துவத்துறையில் 1968 - ஆம் ஆண்டு நோபெல் பரிசு பெற்றவரான டாக்டர் ஹர் கோபிந்த்கோராணு என்பவர் பிறப்பால் இந்தியர். இந்தியாவில் கல்வி கற்று வாழ்ந்தவர். ஆனால் அறிவுவடிகால் நிலையால் அவர் தற்போதைய அமெரிக்கக் குடிமகனாக உள்ளார்.

மருத்துவ அதிகாரியாக ஒருவர் படித்துப்பட்டம் பெறும்வரை இந்திய அரசு செலவிடும் தொகை ரூபாய் ஒருலட்சத்து இருபத்தையாயிரம். இதைப்போல எல்லாக் கல்வித்துறைகளிலும் படிப்போருக்கு அரசின் பணம் செலவிடப்படுகிறது. இப்பணம் வீணாக்கப்பட வேண்டுமா? ... ... கூடாது. எனவே, இந்திய அரசு அறிவு வடிகால்நிலையைத் தடுத்துநிறுத்த வேண்டும். திறமையுள்ள அவர்களின் பணி, ஐரோப்பியா நாகரிகத்திற்கு அடிமைப்படாமல், தங்களின் தாய்நாட்டிற்குப் பயன்படும் வகையில் அமைந்தால் நாடு நலம் பெறும்.

ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல் வாதிகள் அவ்வப்போது தங்கள் விருப்பப்படி புதிய பாடங்களை பாடத் திட்டத்தில் புகுத்தும் இழிநிலை இங்கு உள்ளது. இந்நிலை மாறியே ஆக வேண்டும். இந்தியக் கல்விக் குழுவினருக்கும், அரசியலார்க்கும் தொடர்பே இருத்தல்கூடாது. கல்விக்குழு தன்னிச்சையாகச் செயல்பட வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும்.

கல்விப்பயன் நிறைந்திட ..... :

1. ஒவ்வொருவருக்கும் அவரவர்

Scanned by TapScanner

With best compliments from :

BOOKS LAND

(Publishers & Booksellers)

Mudangiar Road, :: RAJAPALAYAM.

★ ★ ★

We are dealing with books and notes for:-

- Colleges, Schools & Polytechnics
- TNPSC Exams
- UPSC Exams
- Banking Services Exams
- Shorthand Exams
- General Reading

Step in and Step out
with treasure of Knowledge!

Scanned by TapScanner

விருப்பப்படியே, விரும்பிய துறையில், தம் திறமையை நாட்டிற்கு அளிக்கும் வகையில், கல்வி கற்கச் செய்ய வழிவகை செய்தல் வேண்டும்.

உலகின் பல நாடுகளில் இத்திட்டம் இருப்பினும் அதைச் செயல்படுத்தவில்லை. ஆனால் அந்நாட்டின் ஆட்சியாளர்களின் குடும்பத்திற்கு ஏற்ப அவை விரும்பித் தரப்படுகின்றன.

2. ஒருவரின் கல்விக்காலம் முடிந்த பின் அவருடைய சேவை அல்லது பணி இந்நாட்டிற்குக் கிடைக்க வேண்டும். அதற்கேற்ப வேலைவாய்ப்புகள் எளிதாகக் கிடைக்கும்படி செய்யவேண்டும்.

இலஞ்ச ஊழலின் காரணமாக வேலை வாய்ப்பு அளிக்கப்படுகின்ற துரதிருஷ்டமான இழி நிலையைத் தகர்த்தெறிய வேண்டும்.

3. உழைக்காமல் மக்களை ஏமாற்றும் ஊதாரித்தனமான வாழ்வு வாழ விரும்புவதை இளைஞர்கள் சாம்பலாக்கி விட வேண்டும்; அவ்வாறு இளைஞர்கள் நினைக்கும்படியான, சிந்தனை யுணர்வைத் தூண்டுவதாகக் கல்விமுறை அமைதல் வேண்டும்.

4. நாட்டுப் பற்றை மையமாகக் கொண்டதாகவும். தொழில்துறையில் ஊக்கம் ஊட்டக் கூடியதாகவும் உள்ள கல்வியே இந்தியாவிற்குச் சிறந்த வாழ்வளிக்க முடியும். அதற்கேற்பக் கல்வி முறை அமைதல் வேண்டும்.

முடிவுரை :

பிற நாடுகளோடு ஒப்பிடும்போது இந்தியக்கல்வி மொத்தத்தில் ஏற்றம் கண்டும், சில மேலைநாடுகளோடு ஒப்பிடும் போது பின்தங்கியும் உள்ளது. ஆனாலும், நம் நாட்டுக் கல்விமுறையை, எந்த அன்னிய நாட்டின் கல்வி அடிப்படையிலும் அமைக்காமல், நமக்கே உரிய தனிப்பாதையில், தேசப்பக்தியை மையமாக வைத்து, இந்தியாவிற்கு முன்னேற்றத்தை அளிக்கக் கூடிய, நன்னெக்குடைய, நற்சிந்தனையைத் தரக் கூடியதாக, மாற்றி அமைக்க வேண்டும்.

அத்தகைய கல்விமுறை அமைந்திடும் நாளை இந்தியா வரவேற்கப் போகிறது. அந்த நாள் இந்திய நாட்டின் பொன்னாள்; திருநாள் ஆகும். பாரதத்தின் பெருமைதனைப் பார்முழுதும் போற்றிப் புகழ்ந்திடும் நன்னாளை எதிர்நோக்கி, நாம் வரவேற்போம்; அத்தகைய கல்வி முறையை இந்தியா பெற்று வளம் காண்பதாக!

Scanned by TapScanner

MADRAS CHIPBOARDS LTD.,

"SRI BHAVANAM"
1089/W-20, P. S. K. Nagar,
RAJAPALAYAM.

Phone : { Office : 2931 / Factory : 2976 }

Gram : "CHIPBOARDS"

★

Manufacturers of :

'LAKSHMI' BRAND

Chipboards and Special Veneered Chipoards

★

Ideal for :

Partitions, False Ceiling Furniture Making etc.

★

MADRAS SALES OFFICE :

MADRAS CHIPBOARDS LIMITED,

Chordia Mansion, 1st Floor,
150-A, Mount Road, MADRAS - 2.
[**Phone : 88640 & 83443**]

★

FOUNDER :

Sri N. R. KRISHNAMA RAJA.

Scanned by TapScanner

சுவாமி விவேகானந்தரின் பொன்மொழிகள்

வே. வேணுகோபால்,
இளம்ல் வணிகவிய மூன்றும் ஆண்டு.

★ எழுமின்! விழிமின்! குறிசாரும் வரை நில்லாது செல்மின்!

★ பலமே வாழ்வு, பலமின்மையே மரணம்.

★ பாவம்யாவையும், தீமையாவையும் ''பலவீனம்'' எனும் ஒரு மொழிக்குள்
★ அடக்கலாகும்.

★ இவ்வுலகம் கோழைகட்கன்று. ஓட முயலாதே. வெற்றியையோ தோல்வியையோ
கோராதே.

★ யான் மெய்யைப் பற்றி நிற்பவன். மெய் ஒருக்காலும் பொய்யோடு ஒன்று சேராது.
உலகமுழுவதுமே என்னை எதிர்த்து நிற்பினும், இறுதியில் மெய் வெல்வது திண்ணம்.

★ இலக்ஷியமுடையான் ஆயிரம் பிழை இயற்றுவனையின், இலக்ஷியமிலாதான்
ஐயாயிரம் பிழை இயற்றுவான் என்பது எனக்கு உறுதி. ஆதலால், இலக்ஷிய
முடைமை மிக நன்று.

★ உலகிற்கு நன்மைசெய்வதே நமது நோக்கம். நமது பெயர்களைப் பறையறைவதன்று.

★ அற்புதமாயுள்ள யாதொன்றையும் நாடாதே. அதை உன் கால் விரல்களாலும்
தொடாதே.

★ சுயநலன் உற்றதே தீய ஒழுக்கமாம், சுயநலன் அற்றதே நல்லொழுக்கமாம்.

★ தம்மிடத்து நம்பிக்கை கொள்பவரே பெருமையும், வலிமையும் எய்தியுள்ளனர். எந்
நாட்டுச் சரிதையிலும் என்றைக்கும் காணப்படுவது இதுவே.

★ தூய்மையை நாடும் போராட்டத்தில் அழியினும் அழிக; ஆயிரம்முறையும் மரணத்
திற்கு நல்வரவும் கூறுக; தளர்வுறுதே, நல்லமுதம் பெறற்கரியதாயினும்
நஞ்சுண்ணக் காரணம் உண்டோ?

★ தன்னலமின்மையே மிக்க கூலி தரும்.

★ உண்மை, தூய்மை, தன்னலமின்மை இம்மூன்றும் உள்ளவிடத்தெல்லாம், அவற்றை
உடையாரை நசுக்கும் ஆற்றல் கதிரவன் மண்டலத்தின் கீழோ, மேலோ இல்லை
யென்றிடுக. இவற்றைப் பெற்றுள்ளவன் ஒருவனேனும், உலக முழுவதையும்
எதிர்த்து நிற்கும் திறனுடையனுவான்.

★ எழுந்து நில்லுங்கள், தைரியமாயிருங்கள், பலமுடையவராகுங்கள். முழுப்
பொறுப்பையும் உங்கள்மீதே சுமத்திக்கொண்டு உங்களது சொந்த விதியைப்
படைத்தவர் நீங்களே என்பதை அறியுங்கள். உங்கட்கு வேண்டிய முழுப்பலமும்,
முழுத்துணையும் உங்களுக்குள்ளே இருக்கின்றன. ஆதலால் வருங்கால
வாழ்க்கையை உமது பிரியப்படி அமைத்துக்கொள்ளுக்கள்.

Scanned by TapScanner

குழந்தைகள் வளர்ப்பு

கி. இராமானுஜம்,
வணிகவியல் மூன்றும் ஆண்டு.

''ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே

பெண்கள், தாய்மார்கள் குழந்தைகளைப் பெற்றுத்தருவதே தங்கள் கடமை; சான்றோனாக்குதல் குழந்தையைப் பெற்ற தந்தைக்குத்தான் கடன் என்று பாட்டை முணுமுணுத்துவிட்டு உட்கார்ந்துவிடக் கூடாது. பெற்ற குழந்தைகளைப் படிக்க வைக்க வசதியில்லையே! அப்படியே படிக்க வைத்தாலும் வேலை கிடைக்குமா? என்றெல்லாம் எண்ணிவிட்டால் குழந்தை, குழந்தையாகத்தான் இருக்கும். தாயானவள் தான் பெற்ற மழலைச்செல்வம் அழும் பொழுது அந்தப் பிஞ்சு உள்ளத்தைப் பார்த்து, ''அழாதேடா கண்ணு, கடலை மிட்டாய் வாங்கித்தாரேன்; பூச்சாண்டி இருக்கான் உன்னைப் பிடித்துக்கொள்வான்'' எனப் பயம்காட்டலாகாது. அவன் அழுகையை நிறுத்தும்பொருட்டு ''அதோ வெண்ணிலாவைப்பார்! சூரியனைப்பார்! விண்மீனைப்பார்!'' என்று சுட்டிக்காட்டி குழந்தையின் மனத்தில் இயற்கையைக் காட்டி இயற்கையறிவை வளர்க்க அந்தக் குழந்தையின் தாய் முயற்சிக்கவேண்டும். விளையாட்டுக்கருவிகளைத்தந்து விஞ்ஞான அறிவை வளர்க்கலாம். கொடுக்கும் விளையாட்டுப் பொருட்கள் சிந்தனையைத் தூண்டவேண்டுமே தவிர, அந்தக் குழந்தையை விளையாட்டுப் பிள்ளையாக மாற்றி விடுதல் கூடாது.

குழந்தைகளுக்கு எப்படிப்பட்ட விளையாட்டுப் பொருட்களை விளையாடுவதற்காகக் கொடுப்பது? இதுபற்றிச் சிந்தித்தால் அறிஞர் ஐன்ஸ்டைன்தான் நம் கண்முன்னே நிற்கிறார்.

ஆல்பர்ட் ஐன்ஸ்டைன்:

தென் ஜெர்மனியில் ஹெர்மன் ஐன்ஸ்டைன், பாலின் என்ற தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார் ஐன்ஸ்டைன். இவர்தம் குழந்தைப்பருவத்தில் நலிந்த உடலும், வளர்ச்சியில்லாத அறிவுமே பெற்றிருந்தார். பற்றுக்குறைக்கு நீண்ட நாட்கள் பேசாமலும் இருந்தார். வேடிக்கை விளையாட்டுக்களைப் புறக்கணித்து குழந்தைப் பருவத்திலே தனிமையை நாடினார். இவர் வாழ்க்கையில் முன்னேறமாட்டார் என்று பலர் எண்ணினர். ஆனால் அவர்கள் நினைப்பு தவிடுபொடியாகிவிட்டது. எப்படி?

ஒரு முறை ஐன்ஸ்டைன் தந்தை தன் மழலைச் செல்வம் விளையாடுவதற்காக மின் காந்தத் திசை காட்டும் கருவியை வாங்கித்தந்தார். எத்திசையில் திருப்பினாலும் அதில் உள்ள காந்த முள் வடக்கு நோக்கியே இருப்பதைக் கண்ட இவர் வெட்டவெளியில் அவ்வூசியை இழுக்க ஒரு ஆற்றல் இருக்கவேண்டும் என்று விளையாட்டாக நினைத்தார். இவர் மனத்தில் தோன்றிய இந்த எண்ணமே அவரை

Scanned by TapScanner

பிற்காலத்தில் அறிஞராக்கியது என்று கூறலாம்.

இனி, குழந்தைப் பருவத்தில் கோழி களைப்போல் அடைகாத்த எடிசனைப்பற்றி ஆராய்வோமா ?

தாமஸ் ஆல்வா எடிசன் :

இவர் அமெரிக்காவில் மிலான் என்ற ஊரில் 'சாமுவேல் எடிசன், நான்சி எலியட்' என்ற தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தவர். ஏழ்மையான குடும்பம்தான். தாயார் தன் குழந்தையைப் படிக்கவைக்க வசதியில்லையே! என்று வருந்தினாரா ? இல்லை; அந்த அம்மையார் ஓர் ஆசிரியை.

ஓர் அறைக்குள்ளே கிடந்து கல்வி கற்பதை விரும்பாத எடிசன் பள்ளி செல்வதை வெறுத்துத் தன் தாயிடமே கல்வி பயின்றார். எடிசன் பள்ளி செல்வதை வெறுத்தாலும், படிப்பை என்றும் வெறுத்ததில்லை.

இன்று தந்திக்கருவியில் ஒரு மாற்றம் இருக்கிறதென்றால் அந்தப் பெருமை எடிசனையே சாரும். டெலிபோனைக் கண்டுபிடித்தவர் கிரஹம் பெல் என்றாலும் தெளிவாக 'வாங்கும் கருவி'யைக் (Receiver) கண்டுபிடித்தவர் இவரே.

கிராமபோன், பல்பு, சினிமாப்படக் கருவி என பலவற்றைத் தந்த இவர் கல்லூரிக்குச் சென்று அல்ஜிப்ரா படிக்கவில்லை; கணக்குப்பாடங்கள் படிக்கவில்லை.

இவருடைய இயற்கையான சிந்திக்கும் அறிவை வளர்த்தவரே இவருடைய தாயார்தான். ஈடு இணையில்லா மாணிக்கத்தைப் பெற்ற அந்த அம்மையாருக்கு நாம் என்றும் கடமைப்பட்டிருக்கிறோம்.

★ ★ ★ ★

ரவி :— உனக்கு எப்படிடா இவ்வளவு ரூபாய் கிடைக்கிறது ? தினமும் ஒவ்வொரு ஹோட்டலில் சாப்பிடுகிறாயே !

ரகு :— நான் காசு கொடுத்தா சாப்பிடுகிறேன். வீட்டில் செய்யும் ஒரு காரியத்தை அங்கு செய்கிறேன். அதற்கு உரிய பலன் பெண்டாட்டியிடம் வீட்டில் கிடைக்காவிட்டாலும் ஹோட்டலில் நன்றாகக் கிடைக்கிறது.

ரவி :— அப்படி என்னடா பெரிய காரியம் செய்கிறாய் ?

ரகு :— மாவாட்டிக் கொடுக்கிறேன். வயிறு நிரம்பச் சாப்பிடுகிறேன்.

Scanned by TapScanner

வாழ்க்கை வாழ்வதற்கே

ர. சுவிராஜ்,
இளங்கலை இரண்டாம் ஆண்டு.

வாழ்க்கைளன்பது மலையுச்சிக்கு ஏறுவதைப் போல கடினமானதாகும். போராட்டம் இல்லாத வாழ்க்கை சாரமில்லாதது; பெருமையில்லாததாகும். வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாவிட்டால் அது உண்மையான வெற்றியுமில்லை. போராட்டம் இல்லாமற் போனால் சாதனை இருக்காது

துன்பங்கள் பலவீனமானவர்களை அச்சுறுத்தும், ஆனல் மன வலிமை படைத்தவர்களுக்கோ துன்பமே தூண்டுகோலாக அமைகின்றது. வாழ்வில் குறுக்கிடும் தடைகளையும், முட்டுக்கட்டைகளையும், வெல்லக்கூடியவைகளை வாழ்க்கை அனுபவம் சுட்டிக்காட்டுகிறது.நல்லொழுக்கம், ஊக்கம், விடாமுயற்சி, செய்திறன், எல்லாவற்றிற்கும் மேலாகத் துன்பம் இவற்றை வென்றே தீருவது என்ற மன உறுதி இருந்தால்தான் வெல்லமுடியும்.

நாடுகளுக்காகட்டும்; தனி மனிதர்களுக்காகட்டும்; துன்பங்களே கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தையும் வளர்க்கும் பயிற்சிப் பள்ளிகளாகின்றன. எங்கே துன்பம் தோன்றினுலும் அதனுடன் மோதி வெல்வதற்கு மனிதன் முன்வர வேண்டும். துன்பங்களுடன் போராடுவதனுல் மனிதனுடைய வலிமை அதிகரிக்கிறது. அதனுடைய ஆற்றல் ஒழுங்குபடுத்தப்படுகிறது. உறுதியோடு தடைகளை எதிர்க்கும்போது, மலைபோல் வரும் தடைகளும் பனிப்போல் ஆகிவிடும்.

நம்மால் தாண்டிவிட முடியாத மலைத் தொடர்கள் போல் தடைகள் நமக்கு முன்னே குறுக்கிடும்போது நாம் அவற்றை வெல்வதற்கு எளிதாகி விடுகிறது. முன்பு நம் கண்களுக்குப் புலனுகாப் பாதைகள் அந்த மலைச்சாரல்களிடையே புலப்படுகின்றன. பாதைகள் குறுகியவைகளாகவும், கடினமானதாகவும் இருக்கலாம். ஆனல் துன்பங்கள் எனும் மலைகளைக் கடக்க அவை நமக்கு உதவுகின்றன,

வல்லமை, நேர்மை, நீதி, சுயதியாகம் போன்ற மனித இயல்பின் உன்னதமான பண்புகள், சரியான வகையில் பணத்தைப் பயன்படுத்துவதோடு நெருங்கியஉறவுகள் கொண்டுள்ளன.

பொருளை ஈட்டுவதற்குரிய சரியான சீரிய நெறியின் வழியே ஈட்டியும் அதனைச் சேமித்தும் காப்பதற்குரிய முறைகளால் காத்தும் சிறந்தவகையில் அதனைப் பயன்படுத்துவதனுலேயே உயர் பண்புகளை வளர்க்கவும், வாழ்விக்கவும்முடியும். வசதியும், வாய்ப்பும் நம்மைத் தேடிவரா. நாம்தான் அவற்றைத் தேடிப்போகவேண்டும். சௌகரியமாக வாழவேண்டும்; சங்தடத்தோடு வாழக்கூடாது. அதற்கான அனேத்து நேர்மையான முறைகளிலும் பயனுள்ள வழிகளிலும் நாம் பாடுபட வேண்டும். வாழ்க்கை எதற்காக? வாழ்வதற்குத் தானே? ★

Scanned by TapScanner


An Extraordinary Meeting of the Commerce Association



Prof. A. Janardhanan,
Presides.



R. Ganesan, III B.Com.,
Secretary, Welcomes.




Address by
Thiru B. Santhanakrishnan, M.Sc.,
Branch Manager, Syndicate Bank,
Rajapalayam.



Memento to chief guest.

Scanned by TapScanner

An Extraordinary Meeting of the History Association




Thiru R. Mariappan's presidential address.



Thiru P. Gomathinayagam, President of the Association Welcomes.



The Principal introduces the Chief Guest.



Address by Prof. S. Element, Devanga Arts College, Aruppukottai.

Scanned by TapScanner

பழைச் சனியன் திரிப்பு!

கே. எம். தினகரன்,
இளம் வணிகவியல் மூன்றும் ஆண்டு.

காலை பேப்பரில் வாரப்பலன் பகுதியை ஆராய்ந்தேன். எனது ராசிக்குச் சனி அஷ்டமத்தில் இருப்பதால் மிகவும் ஜாக்-கிரதையாக இருக்க வேண்டுமாம். 'யாரை யும் ஏமாற்ற நினைக்காதே' என்று இருந் தது! 'நாம் யாரை ஏமாற்றப் போகிறோம்' என்று எனக்குள் எண்ணிக்கொண்டேன். ஆபீசுக்கு நேரமாகிவிட்டதால் அவசர அவசரமாகக் கிளம்பினேன். ஆபீஸ் எதி-ரில் உள்ள பஸ் ஸ்டாப்பில் இறங்கினேன்.

ரோட்டைக் கிராஸ் செய்ய வேண்டிய வழி கொஞ்ச தூரம் தள்ளி இருந்தது. அவ்வளவு தூரம் போய்த் திரும்பி வர சோம்பேறித்தனம். முன்னுடியே கிராஸ் செய்தேன். டிரா∴பிக் போலீஸ்காரரின் விசில் சப்தம் என் காதில் விழுந்தது! தப்பிக்க வேண்டுமே! காதில் விழாதது போல் நடந்தேன். மேலும் மேலும் ஊதிக் கொண்டே பின்னல் வந்தார் போலீஸ்-காரர். நான் செவிடன்போல் திரும்பிப் பார்க்காமல் நடந்தேன்.

"யோவ்! நில்லுய்யா. விசில் குடுத்தா திரும்பிப் பார்க்காம போறியே. அட, உன்னத்தாய்யா ... !"

— டிரா∴பிக் போலீஸ்காரரின் கை என் தோள் மீது பட்டவுடன்தான் திரும்பிப் பார்த்தேன். என் மனதுக்குள் ஒரு வித பயம். எந்தச் சமயத்திலும் காது கேட்பது போல் காட்டிக்கொள்ளக் கூடாது! எப்படி யாவது இவரை ஏமாற்றவேண்டும் என்று முடிவு கட்டினேன். 'என்ன சார் வேணும்?' நான்தான் கேட்டேன். "உன் காது என்ன செவிடா? நான் பாட்டுக்கு விசில் கொடுக் கிறேன், நீபாட்டுக்குப் போறியே! உன் பேர் என்ன?"

"மணி பத்து இருபது சார்!"

நான் இப்படிச் சொன்னதும் போலீஸ் காரர் உண்மையில் சிரித்துவிட்டார். என் மனதுக்குள் ஒரே சந்தோஷம். நல்லவேளை! செவிடு என்று நம்பிவிட்டார் போலீஸ் காரர். நான் குறுக்கே வந்ததை ஜாடை யில் சொல்லி என்னை சார்ஜ் செய்யப் போவதாய்ச் சொன்னார்.

ஜாடையில் சொன்னதால் என்னால் தப்பிக்க முடியவில்லை. பெயர், விலாசம் கேட்டார்.

"சார்! என் பேர் கோதண்டபாணி. ஆபீசுக்கு நேரமாகிவிட்டதால் அவசர மாகக் குறுக்கே வந்துவிட்டேன். மன்னிச் சிடுங்க சார்!"

"காதுதான் செவிடாச்சே. இப்படித் தான் ரோட்டை கிராஸ் செய்யறதா! ஏதா வது லாரி, பஸ் ஹாரன் குடுத்து, உன் காதில் விழுகாம அடிபட்டு செத்துத் தொலைஞ்சு எங்க உயிரைத்தான் எடுப் பீங்க." — மறுபடியும் சப்தம் போட்டுத்-தான் சொன்னார். சமாளித்தேன்.

Scanned by TapScanner

"அதோ, அந்த ஆபீஸில்தான் வேலை செய்றேன்." — சம்பந்தம் இல்லாமல் பதில் கொடுத்தேன். போலீஸ்காரருக்கு என்மீது சந்தேகம் வந்துவிட்டது. இருந்தாலும், "போய்த் தொலய்யா" என்று சொல்லிக்கொண்டே திரும்பி நடந்தார். தப்பித்தோம், என்று நினைத்துக் கொண்டே நகர்ந்தேன். இருபது அடி தூரம் நடந்த பிறகுதான் ஏழரை நாட்டுச் சனிக்கு என் மீது அதிக பிரியம் என்று தெரிய வந்தது.

"கோதண்டபாணி சார் ... !" — யாரோ என் பெயரைச் சொல்லி சன்னமான குரலில் கூப்பிட்டார்கள். யார் கூப்பிடுவது என்று சட்டென்று திரும்பினேன். கூப்பிட்டது வேறு யாரும் இல்லை. அதே டிராஃபிக் போலீஸ்காரர்தான். இரண்டு தினங்கள் கழித்துக் கோர்ட்டில் அபராதம் கட்டிவிட்டுத் திரும்பினேன். ஏழரைச் சனி என்னைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தது!

★ ★ ★ ★

நண்பர் :-

டேய், சோணைசலம் ! உனக்கு உலகச் சோம்பேறிகள் மாநாட்டுக்கு அழைப்பு வந்திருக்கு என்ருயே. அது எங்கே எப்போ நடக்கிறதாம் ?

சோணைசலம் :-

அழைப்பு வந்து நாலு நாள் ஆச்சுப்பா ! இன்னும் பிரித்துப் பார்க்கலே !

நண்பன் :-

... ? ... ? ... ?

ப. செ.

போலீஸ் அறிவிப்பு :-

துப்பு துலக்கச் சென்ற போலீஸ் நாயைக் காணவில்லை. நாயைப் பற்றித் துப்பு கொடுப்போருக்குத் தக்க பரிசு கொடுக்கப்படும்.

ப. செ.

Scanned by TapScanner

ரிந்திர வழக்கு

ப.ப. இராமதாஸ்,
ளம் வணிகவியல் இரண்டாம் ஆண்டு.

சிவசங்கரன் ரெயில்வேயில் ஸ்டே-
ன மாஸ்டராக வேலைபார்ப்பவர். இரண்டு
ஆண்டுகட கு முன்னர் அவர் சிவகாமியை
ணமசெய்து கொண்டார். மணம் செய்
ய் போது சிவசங்கரனின் வயது 30.
சிவகாமியின் வயது 20.

பொருத்தமான ஜோடியென ஊரே
பாராட்டுமளவிற்கு ஆரோக்கிய வாழ்வு
வாழ்ந்த சிவசங்கரன் - சிவகாமி தம்பதி
னரில், ஊராரின் கண்பட்டதாலோ என்
னவோ, சிவகாமி தீராத வயிற்றுவலியால்
நோய்வாய்ப்பட்டாள். எவ்வளவோ வைத்
திய சிகிச்சைகள் செய்தும் பலனில்லை.

ஒருநாள் தூங்கிக் கொண்டிருந்த
மனைவியை எழுப்பினர் சிவசங்கரன்.

''என்ன சிவகாமி எழுந்திரு''.

''எதற்கு அத்தான்''?

''மாத்திரை சாப்பிட்டபின் படுத்துக்
கொள்''.

''வேண்டாம். இந்த மாத்திரைகளால்
எனது நோயைக குணப்படுத்த முடியாது.
என் விதி, இவ்வாறு துன்பப்படுகிறேன்''.

''அப்படியெல்லாம் சொல்லக்
கூடாது. இந்தா, மாத்திரை''.

மருந்தினை உட்கொண்ட மறு விநா
டியே சிவகாமி கேவிக் கேவி அழ ஆரம்
பித்தாள். இதனால் திடுக்குற்ற சிவ-
சங்கரன், ''சிவம், ஏன் அழுறே? டாக்ட
ரைக் கூப்பிடவா''? என்றார்.

''வேண்டாம் அத்தான். நான் எனது
வலிகாக வருத்தப்படவில்லை. மனைவி
கணவனுக்குப் பணிவிடை செய்வதற்குப்
பதில் கணவன் மனைவிக்குப் பணிவிடை
செய்யும் துர்பாக்கிய நிலையைத் தங்க
ளுக்கு ஏற்படுத்திய காரணத்திற்காக நான்
அழுகிறேன். வேறென்றுமில்லையென்றாள்''.

''ஒரு கணவன் மனைவிக்குள் அன்புங்
கிறது ஒருவர் பிறரது நலத்தின்மேல் பற்று
கொள்வதுதான். நான் நல்ல கணவனுக
இருக்கணும்னு நினைச்சா நான் உனக்
கவனிச்சே தீரணும். இதனால் எனக்குச்
சங்கடமும் இல்லை. இப்படி நினைத்து உன்
உடலை மேலும் கெடுத்துக் கொள்ளாதே''
என்றார் அவர்.

★ ★ ★

10-7-79 செவ்வாய்கிழமை இரவு
மணி ஒன்று.

சிவசங்கரன் கையிலே ஒரு ரத்தம்
தோய்ந்த கத்தியுடன் காவல் நிலையத்தி
னுள் நுழைகிறார். அவரைப் பார்த்த
இன்ஸ்பெக்டர்,

''யாரப்பா நீ? கத்தியோட வர்றே.
யாரை என்ன செஞ்சே'',எனக்கேட்கிறார்.

''நான் சிவசங்கரன். இந்த ஊர்
ஸ்டேஷன் மாஸ்டராகப் பணியாற்று

Scanned by TapScanner

கிறேன். நான் இக்கத்தியால் என் மனைவி சிவகாமியை குத்திக் கொன்று விட்டேன்''. என்ருர் சிவசங்கரன்.

''கொலேயா செய்தே''?

நோ. நோ. இது ஒன்றும் கொலேயல்ல''.

''குத்திக்கொன்ருல் கொலேதானே''?

'' என் மனைவியின் விருப்பத்திற்கிணங்க நான் அவளைக் கொன்றதால் இது கொலேயாகாது''.

'' என்னப்பா. கொலேயைச் செய்துட்டு, கொலேயில்லேன்னு வாதாடறே. அதெல்லாம் கோர்ட்லே பேசிக்குவோம்.

இதெல்லாம் அங்கே நடந்த உரையாடல்கள்.

★ ★ ★

பழி உணர்ச்சியின் காரணமாகத் தன் மனைவியைக் கொலேசெய்தார் சிவசங்கரன் எனப் போலீஸார் குற்றம் சாட்டிக் கோர்ட்டில் வழக்குப் பதிவு செய்தனர்,

2-10-1979 - இல் சிவசங்கரனின் கொலேவழக்கினை கோர்ட் ஏற்றுக்கொண்டது. சிவசங்கரனின் சார்பில் வாதாட ஒருவரும் அமர்த்தப்படவில்லே. சிவசங்கரன் குற்றவாளிக கூண்டிலேறி நிற்க, அரசாங்க வக்கீல் குணசேகரன் தனது குறுக்கு விசாரணையைத் தொடங்குகிறர்.

''உமது பெயர்''?

''சிவசங்கரன்''.

''கொலேசெய்யப்பட்ட உமது மனைவியின் பெயர்''?

''சிவகாமி''.

''உமக்குத் திருமணம் எப்போது நடந்தது''?

''எனது முப்பதாவது வயதில்''.

''தேதியைச் சொல்லவும்''?

''ஞாபகமில்லே''.

''உமது தற்போதைய வயது''?

''முப்பத்திரண்டு''.

''நீர் உமது மனைவியை கொலே செய்தீரா''?

''இல்லே. குத்திக் கொன்றேன்.

''குத்துவதும், கொலே செய்வதும் ஒன்றுதான். நீர் கூறும் காரணங்கள் இவ் வழக்கிற்குப் பொருந்தாது. கொலே செய்யவில்லேயென்ருல், பிறகு ஏன் உமது மனைவியைக் கத்தியால் குத்தீனீர்?''

''அவளுக்குத் தீராத வயிற்றுவலி. அவளது விருப்பத்தின்படி அவளைக் குத்திக் கொன்றேன்.''

''அவள் தானுகவே தற்கொலே செய்து கொண்டிருக்கலாமே? உம்மை குத்தச் சொன்னதன் காரணம் ஏதேனும் உண்டோ?''

''அவளது சில தற்கொலே முயற்சிகளே நான் தடுத்து நிறுத்தியிருக்கிறேன் ஆனுல் அன்று இரவு கடுமையான வலியால் துன்பப்பட்ட என் மனைவி தனேக் கொன்று விடும்படிக் கூறி மன்ருடினுள். இல்லேயேல் தானுகவே தற்கொலேசெய்து கொள்வதாகக் கூறினுள். எனவே அவளது விருப்பத்தின்படி அவளைக் குத்திக் கொன்றேன்.''

அன்று அத்துடன் விசாரணை

Scanned by TapScanner

முடிவுற்றது.

மறுநாள் விசாரணை தொடர்கையில் அரசாங்க வக்கீல், ''மாண்புமிகு உயரிய நீதிபதியவர்களே! இந்த வழக்கில் குற்றவாளி சிவசங்கரன் உண்மையில் கொலையாளியே. அவர் உபயோகித்த கத்தி இதோ உள்ளது. வெறும் ஏமாற்று வார்த்தைகளால் நம்மை ஏமாற்றுகிறார். எனவே, கனம் நீதிபதியவர்கள் குற்றவாளிக்குரிய தக்க தண்டனையளித்துத் தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்'' என்றார்.

நீதிபதி சிவசங்கரனை நோக்கி, ''நீர் ஏதேனும் கூற வேண்டியிருந்தால் கூறலாம்'' என்றார்.

சிவசங்கரன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே, ''கனம் நீதிபதியவர்களே! நான் எனதுமனைவியின் வேண்டுகோளுக்கிணங்க அவளைக் குத்திக் கொன்றேன். அதனுலேயே நான் போலீஸில் சரணடைந்தேன். கொலை எண்ணம் எனக்கிருப்பின் நான் தப்பியோடிருக்கலாம். யாரையும் என் சார்பில் வாதிடச் செய்யவில்லை. குற்றம் செய்தால்தானே தண்டனை. தண்டனைக்கு நான் அஞ்சவில்லை. வழக்கு மன்றத்தில் மிகப் பெரிய தண்டனை தூக்கு. எனது கண்ணின் கருமணியான என் மனைவியை நான் கொன்றதால் எனக்கு தூக்கிற்கும் மேலான தண்டனையிருப்பினும் அளிக்க வேண்டுகிறேன். ஏனெனில் கட்டிய மனைவியைக்கொன்ற பாவி நான்'' என்றார்.

வழக்கின் முடிவில் நீதிபதி தீர்ப்புக் கூறினர். ''கொலைக்குற்றம் சாட்டப்பட்ட சிவசங்கரனை நான் விடுவிக்கிறேன். அவரது வார்த்தைகள் ஒவ்வொன்றும் துயரத்தின்-சோகத்தின் பிம்பங்கள். அவருக்குக் கொலை செய்யும் எண்ணம் இருந்திருப்பின் சரணடைவதற்கு பதில் வேறு எளிய முறையில் கொலைசெய்து தப்பித்து இருக்கலாம். தன் மனைவியைத் தானே கொன்றதால் வருந்தும் இவரைச் சரிப்படுத்த பல ஆண்டுகள் ஆகலாம். அதற்காக அவராகவே மனம் புழுங்கிச் சாகவும் நேரிடலாம். இது அவரது பேச்சுச் சாதுரியம் அல்ல.

இது போன்ற ஒரு துயரமான வழக்கினை நான் எப்போதும் சந்தித்ததில்லை. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர், விடுவிக்கப்பட்டாரே என்ற நினைப்பில், யாரேனும், தான் கொலை செய்யப்பட்டவரின் விருப்பத்திற்காகக் கொன்றேன் என பேச்சுச் சாதுரியம் செய்தால், அதனை வழக்கு மன்றமும், போலீசும் ஆய்வு செய்து தக்க தண்டனையளிக்கும்''.

நீதிபதி வழக்கை முடித்துவிட்டு ஆசனத்தினின்றும் எழுந்திருக்கையில், தனது கைக்குட்டையால் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

சிவசங்கரனை பைத்தியம் போல தள்ளாடியவாறு நடந்து சென்றார். அந்த நடையில் ஆவேசமோ, அதிகாரமோ, மகிழ்ச்சியோ காணப்படவில்லை. ஆனால் அமைதி காணப்பட்டது.

16-10-79 தினமலரில் வந்த செய்தியான ''மனைவியின் விருப்பத்திற்கிணங்க, மனைவியைக் கொலை செய்த கணவனுக்கு விடுதலை'' என்ற உண்மைச் சம்பவத்தை ஆதாரமாகக் கொண்டு புனையப்பெற்ற சிறுகதையே ''துயரமான வழக்கு''.]

Scanned by TapScanner

அவளே என் காதலி

மா. கானு,
இளங்கலை மூன்றாம் ஆண்டு,

அதிகாலை ஆழிபரப்பில் பூப்பாள்
அன்பெனும் பரிமளம் தருவாள்
அரவணைக்கும் அன்புமனம் தருவாள்
அவளே என் காதலி.

கவிதைக்குப் பொருள் தருவாள்
காரிருளுக்குப் பொன்னொளி ஈந்திடுவாள்
பூவினுக்கு மென்மை தருவாள்
அவளே என் காதலி.

பண்பெனும் நிறைகுடம் அவளே
பார்புகழ் பூங்கொடி அவளே
மனம்கானும் வெண்மதி அவளே
அவளே என் காதலி.

சிங்காரம் பூண்டதும் அவளே
சிலம்பு அணிந்ததும் அவளே
மேகலை கொண்டதும் அவளே
அவளே என் காதலி.

நகைமுகம் ஈவதும் அவளே
உவகை ஊட்டுவதும் அவளே
எந்தொகை சூடியவள் அவளே
அவளே என் காதலி.

திருக்குறள் ஈன்றவள் அவளே
பாட்டுபத்து பாடியவள் அவளே
அகம்புறம் ஆடியவள் அவளே
அவளே என் காதலி.

Scanned by TapScanner

பாவலரின்
பாவேந்திரன்
மு. வ. வின்
அவளே

புதுமைப்பெண்
அழகின்சிரிப்பு
செந்தாமரை
என்

அவளே
அவளே
அவளே
காதலி.

அய்யாவின்
அண்ணாவின்
உலகத்தமிழ்மகாநாடு
அவளே

சீர்மையணிந்தவள்
அழகுபூண்டவள்
கண்டவள்
என்

அவளே
அவளே
அவளே
காதலி.

தென்னகத்தின்
சேய்க்குத்
கவிதைக்குக்
அவளே

பைந்தமிழ்
தாய்
கன்னி
என்

ஆனலும்
ஆனலும்
ஆனதால்
காதலி.

★ ★ ★ ★

"உண்ணாவிரதம்"

ரா. சீனிராஜ்

அருகே

அந்தக் குப்பைத் தொட்டியில்
எண்ணெய்ப் பசையுள்ள
எச்சில் இலைகள்,
மெல்லப்பட்ட
எலும்புத் துண்டுகள்
வாழைப்பழங்களின்
தடித்த சட்டைகள்,
சாத்துக்குடியின்
சத்தற்ற கழிவுகள்,
குளுக்கோசின்
நசுங்கிய மேலுறைகள்,
வில்ஸ், சார்மினர் —
வகையறுவின்
கோட்டை, கொத்தளங்கள்
நடிகைகள் சிரிக்கும்
வார, மாத — ஏடுகள்
இத்தனையும் கிடந்தன.

Scanned by TapScanner


"ஏந்திழையின் ஏக்கம்"

சீ. இராஜேந்திரன்,
முதலாம் ஆண்டு பி.எஸ்ஸி. (கெமிஸ்டிரி)

செங்நிற வானம் கருநிறம் காண
மஞ்சு சூழ்ந்து மாலை வந்திட
பறவைக் கணங்கள் பாடிப் பறந்திட
குயில் பெடையுடன் கூடு திரும்பிட
பிடவும் கொன்றையும் பூத்துக் குலுங்கிட
முல்லைப் பூத்துப் பூமணங் கமழ்ந்திட
கண்ட தலைவிக்குக் காரெனத் தெரிந்தது
முல்லை முறுவல் முள்ளெனத் தைத்திட
தலைவன் நினைவு கண்ணைக் குத்திற்று
உடல் தளர வளையல் நெகிழ்ந்திட
கொடி யசைந்து வாடை தந்தது
மெல்லிய வாடை நல்வாடை யாயிற்று
ஏங்கிய தலைவிக்குச் செல்லல் மிகுந்தது
பொன்னிற மேனியில் பசலை கண்டது
ஈண்டு அனைத்தும் கண்டாள் நெஞ்சில்
தலைவன் வாரா ஏக்கம் பொங்கியதே.

Scanned by TapScanner

Youth for Rural Reconstruction Camp at Somayapuram - (N S S Unit 115)



Volunteers are busy laying a link road.



Thiru N. Gopalsamy, Municipal Commissioner, advices the work.



Dr. U. Gunasekaran's healing touch.



Dr. V. Ramabadran's diagnosis.

Scanned by TapScanner


Inauguration of Textool Centre at Somayapuram - (N S S Unit 115)



Thiru T. C. R. Kothandarama Raja
Inaugurates.



Thiru T. Rathinam of
Sarvodaya Sangh, Srivilliputtur,
blesses the venture.



Thiru M. Karuvelan,
Thasildar,
Commends the project.



Thiru T. Subramaniam of
Khadhi Bhavan, Rajapalayam,
extends his support.

Scanned by TapScanner

வாழ்த்துக்கள்

வே. வேணுகோபால் ராஜா,
இளம் வணிகவியல் மூன்றும் ஆண்டு.

தமிழ்த்தாய் வாழ்த்து

பிறப்பும் இறப்பும் அற்றவளே!
பெரும்பேர் புலவர்களைப் பெற்றவளே!
கறந்த பாற்சுவை பெற்றவளே!
கன்னியெ னும்பெயர் கற்றவளே!
அறம்பொரு ளின்பம் கண்டவளே!
அகமும் புறமும் கொண்டவளே!
திறம் செறி இலக்கியம் உடையவளே!
தினமும் உன்னடி போற்றிடுவேன்!
நற்றிள நீரென நல்லாள் பாலென்!
நாவலர் புகழ வாழ்ந்தவளே!
முற்றிய கழையென முக்கனிச் சாறென
மூழ்கிய சுவையினில் ஆழ்ந்தவளே!
கற்றவ ரெல்லாம் களிப்புற வேண்டி
கவினூ று இலக்கணம் கொண்டவளே!
குற்றுயி ராகக் கிடந்த போதினும்
கொஞ்சும் தமிழே உனைமறவேன்!

நாட்டு வாழ்த்து

நீதி முழங்கிய தென்னாடே — என்றும்
நேர்மை வழங்கிய பொன்னாடே!
சாதி யொழிந்த நன்னாடே — சமயச்
சண்டைகள் மாய்த்த தொன்னாடே!
வேதம் படித்த திருநாடே — இள
வேல்விழி மங்கையர் பெருநாடே!
பேதம் நீக்கிய ஒருநாடே — நீ
பீடை ஒழித்து வாழியவே!

Scanned by TapScanner

பஸ் பயணம்

எம். செல்வராஜ்,
இளம் வணிகவியல் மூன்றும் ஆண்டு.

சின்னஞ் சிறு பஸ்கள்
சிறப்பான ஸ்ரீ நகரில்
கண்ணைக் கவர்ந்திழுக்கும்
கட்டழகு பெண்களைப் போல்!

சரிந்த மெத்தென்ற
சாய்வான ஆசனங்கள்
சிறிய ஒரு வானெலியும்
சிறப்பாகம் இப்பஸ்ஸில்!

போகும் இடங் கூறி
போட்டியிட்டு அழைப்பர்
எங்குதான் சென்றாலும்
இவர்கேட்பர் 25 காசு! ஆனால்

அமர இடம் கிட்ட
ஆண்டவன் அருள் வேண்டும்!
இடமில்லை என்றியம்ப
இவர்கட்குப் பழக்கமில்லை.

நிற்கலாமென்றாலோ
நேர்த்தி மிகு நண்ப!
கற்க வேண்டும் சில
கலைகள் நிற்பதற்கு

தலைவணங்கிட நிற்கத்
தவறியவர் பஸ்ஸிலே
தப்பாமல் பெற்றிடுவர்
தண்டனை தன் தலையினிலே!

மக்கள் தொகை பெருக்கத்தை
மனதிலே படும்படி
நிச்சயம் உணர்ந்திடுவீர்
நீவிரிதில் சென்றிட்டால்

Scanned by TapScanner

வி. சிவகுமார்,
இளம் கணிதவியல் முதலாம் ஆண்டு,

காந்தியைப் பெற்ற நம்நாடு
கதரினைக் கண்டு மனம்கசிகிறது.

நேருவைப் பெற்ற நம்நாடு
நேர்மை யின்றி நடக்கிறது.

திலகரைப் பெற்ற நம்நாடு
திசை மாறிப் போகிறது.

பாரதியைப் பெற்ற நம்நாடு
பாவிகளைக் கொண்டு நிற்கிறது.

சிதம்பரனைப் பெற்ற நம்நாடு
சிந்தனை யின்றிக் கிடக்கிறது

ஆகவே மனமே,

சிந்தனை செய்திட்டாய்
சீர்குலைந்த வாழ்க்கையிலே
சீர்பெறவே எண்ணினீ
சிந்தனை செய்திட்டாய்!

பூவுலகில் பூத்துக்குலுங்கிட
புகழ்மணம் பரப்பிட
புனிதத்தன்மை பெற்றிட
சிந்தனை செய்திட்டாய்!

விண்வெளியில் வட்டமிட
விதியை மதியால்வென்றிட
விஞையொன்றைச் செய்திட
சிந்தனை செய்திட்டாய்!

சிங்காரச் குலவிளக்கைக்
சிதைவரை ஏற்றிவைக்கச்
சீரும்சிறப்பும் பெற்றி –
சிந்தனை செய்திட்டாய்!

Scanned by TapScanner

அவன் தரும் புன்னகை

ஆர். சிராளன்,
இளம் வேதியியல் இரண்டாம் ஆண்டு,

அஞ்சலே! அஞ்சலே!
அதிவிரை அஞ்சலே!
மஞ்சும் மழையும் தடுத்திட இயலா
மறைவாய் வரையும் தகைசால் அஞ்சலே
என்னே விட்டுப் புகைரத மேறி
தென்கோடிக் கரைக்குச் செல்லு வையாகில்
வழியில் காண்பாய் பனைசூழ் பரம்பை
ஆங்கே எந்தன் குலமணி ஒருவன்
அவனிரு கண்கள் தென்னவர் சின்னம்
தன்னெளி நிலவன்ன நல்லொளிர் கன்னம்
அதில்தர நினைத்தேன் ஆயிரம் நித்தம்
அதிதூர மானதால் வாடினேன் நித்தம்
இதைநீ சென்று அவனிடம் சொன்னல்
பொன்நகை தனினும் ஏற்ற மிக்க
நன்னகை தந்து உபசரித் தருவான்
அதுதான் அவன் தரும் புன்னகை!

Scanned by TapScanner



SOCIAL SERVICE LEAGUE



COLLEGE ROTARACT CLUB

Scanned by TapScanner




SPORTS COMMITTEE



OUR BASKETBALL TEAM

Scanned by TapScanner

S S L District Level Hiking on Alagar Koil Hills.



மலை ஏறும் கலைக்கு ஈடு இல்லை



மலை வென்ற மறவர் கூட்டம்




The woods are dark and deep




For pleasure .. searching the hidden treasure

Scanned by TapScanner


OUR COLLEGE ROTARACT CLUB




Chinna Balan, III B.Com.,
President,
Athenaeum Vice-Chairman.



S. Liyakath Ali Ghan,
Vice-President.



N. Vijayan,
Secretary.



D. Rangarajan,
Treasurer.

Scanned by TapScanner

கொ. இளங்கோவன்,
இளம் வேதியியல் முதலாம் ஆண்டு.

பூம்புனல் பொய்கை மீது
பூத்திடும் மலர்கள் என்றுல்
சோம்பலைத் துயிலை நீக்கி
சுழன்றிடும் உலகம் என்னுல்.

தண்பனி வாடைக் காற்று
தலை மறைந்தெங்கோ ஓட,
கண்கவர் ஒளியினூடே கவினுலகம்
சிரிப்பதும் மகிழ்வதும் என்னுல்.

பயிருக்கு உயிரானமழை கொடுக்க
பரந்த கடல்நீரைப் பருகுவேன்நான்
மயிலுக்கு வீடான சோலைதோறும்
மலர்கள்கூட மலர்வது என்னுல்.

காரிருள் அரசை வீழ்த்தி
கதிரொளி வழங்கும் என்னுல்
பாரினுள் உள்ளோரெல்லாம் என்னுல்
பம்பரம் ஆகின்றுரே காண்பீர்.

கீழ்த்திசை வானில் தீயின்
கீற்றெனத் தோன்றும் என்னை
வாழ்த்துவார் புலவோ ரெல்லாம்
நன்றியை மறவேன் என்றும்.

• • •

Scanned by TapScanner

கணிதத்தின் கரு

வி. பி. ராமசாமி.
இளம் கணிதவியல் முதலாம் ஆண்டு.

கூட்டல் (+) :-

கூட்டணியைக்	கூட்டிக்	கொள்
கூட்டத்தைக்	கூட்டிக்	கொள்ளாதே
கருணையைத்	கூட்டிக்	கொள்
கடுஞ்சினத்தைக்	கூட்டிக்	கொள்ளாதே
கொள்கையைக்	கூட்டிக்	கொள்
கொடுமையைக்	கூட்டிக்	கொள்ளாதே

கழித்தல் (—) :-

கடனைக்	கழித்துக்	கொள்
கடமையைக்	கழித்துக்	கொள்ளாதே
வரதட்சணையைக்	கழித்துக்	கொள்
வந்தவம்பைக்	கழித்துக்	கொள்ளாதே
குடிப்பதைக்	கழித்துக்	கொள்
குடியைக்	கழித்துக்	கொள்ளாதே

பெருக்கல் (×) :-

பெருமையைப்	பெருக்கிக்	கொள்
பொருமையைப்	பெருக்கிக்	கொள்ளாதே
பொருளைப்	பெருக்கிக்	கொள்
பெண்டாட்டியைப்	பெருக்கிக்	கொள்ளாதே
அன்பைப்	பெருக்கிக்	கொள்
ஆசையைப்	பெருக்கிக்	கொள்ளாதே

வகுத்தல் (÷) :-

ஆக்கத்தைவழி	வகுத்துக்	கொள்
அழிவைவழி	வகுத்துக்	கொள்ளாதே
வாழ்க்கையைவழி	வகுத்துக்	கொள்
வன்முறையைவழி	வகுத்துக்	கொள்ளாதே
நெஞ்சத்தைவழி	வகுத்துக்	கொள்
வஞ்சத்தைவழி	வகுத்துக்	கொள்ளாதே

Scanned by TapScanner

மது மயக்கம்

ஜி. ரவீந்திரநாதன்,
இளம்வேதியியல் முதலாம் ஆண்டு.

மதியை இழந்துவிட்டு மதுவுண்டு
மனைவி மக்கள் பெற்றோரைத்
தடி கொண்டு தாக்கியபின்
தரையினில் வீழ்த்தி மிதிமிதிப்பான்;

அறியாத மொழியாலே தினம்
அர்ச்சனைகள் தான் தொடர்வான்
நெறியாக வாழும் மனையை
வெறிநாய்க்குப் பலி கொடுப்பான்;

மாலைவரை மனிதனென உலவி-அந்தி
வேளைதனில் மிருகமென உருவெடுப்பான்
சாலைகுளம் மரம் சந்தி
சாக்கடையில் நிதம் சாவான்;

அடுத்தடுத்துக் குழந்தைகளை - அவன்
அடுக்கடுக்காகப் பெற்று விட்டுத்
தெருத்தெருவாய்த் திரிய விட்டு
நடுத்தெருவில் கதை சொல்வான்;

அழுதுஓய்ந்து விட்ட பெண்ணுக்கு
அமிழ்தான நிலை தருவோம்
சாக்கடையின் தன்மை மாற்றி
பூக்கடையாய்ப் பொலியச் செய்வோம்.

★ ★ ★ ★

Scanned by TapScanner

கோபம்

கொ. சிவகுமாரன்,
இளம் வணிகவியல் முதலாம் ஆண்டு.

தேரென நடக்கும் தென்றல்
திடீரெனக் கோபம் கொண்டால்
வேருடன் எதையும் சாய்க்க
வீசிடும் புயலாய் மாறும்,

வானவீதிதனில் தன்கரம் நீட்டி
வட்டமடித்து வரும் செங்
கதிரோன் கோபம் கொண்டால்
உய்யாதிவ் வுலகம் உணர்வீர்!

இயற்கையின் கோபத்தாலே
எங்குமே அழிவுண்டாகும்.
செயற்கையாம் மனிதன் கோபம்
சிந்தனைத் திசையை மாற்றும்.

கற்பிலே விளையும் கோபம்
கண்டிப்பாய் எதையும் வெல்லும்.
நற்றவ முனிவன் கோபம்
நிமிடமும் நில்லா தென்பார்.

கோபத்தால் ஆபத்தென்று
கோபத்தை அறிவால் வென்று
தீபத்தின் ஒளியைப் போல
சிரித்து வாழ்வோம் நாமே.

Scanned by TapScanner

Grams : "BLISS" Telex : MA 294 – RAJA IN Phones : 2481, 2985

RAJAPALAYAM MILLS LIMITED,

Samusigapuram Road, Post Box No. 1,
RAJAPALAIYAM - 626 117.
(South India)

(A Modern Spinning Mills with 36,044 Spindles)

Manufacturers of

COMBED, CARDED, SINGLE & DOUBLE YARN
IN HANKS AND CONES
COUNTS : 20s To 100s

STAPLE FIBRE YARN IN HANKS AND CONES
COUNTS : 30s To 40s

Founder : Sri P. A. C. RAMASAMY RAJA

Chairman : Sri P. R. RAMASUBRAHMANEYA RAJHA, B. Sc.,

Scanned by TapScanner

பாவங்கள்

1. கொள்கை இல்லாத அரசியல்
2. உழைப்பு இல்லாத செல்வம்
3. நன்னெறி இல்லாத வியாபாரம்
4. குணமற்ற கல்வி
5. மனச்சாட்சிக்கு ஒவ்வாத இன்பம்
6. மனிதத் தன்மைக்கு ஒவ்வாத விஞ்ஞானம்
7. தியாகமில்லாத வழிபாடு.

— மகாத்மா காந்தி.

கீதாஞ்சலி

எங்கு மனம் பயமற்றுத் தலை கம்பீரமாய் நிமிர்கிறதோ
எங்கு அறிவு சுதந்திரத்தோடு ஒளிர்கிறதோ

எங்கு உலகம் குறுகிய குடும்பப் பூசல்களால் பிளவுறுமல்
உருப்பெற்றிருக்கிறதோ

எங்கு உண்மையின் ஆழத்தினின்று சொற்கள் உதயமாகின்றனவோ

எங்கே தளரா முயற்சி பரிபூரணத்தை நோக்கிக் கைகளை நீட்டுகின்றனவோ

எங்கே பகுத்தறிவான தெள்ளிய ஓடை
இறந்த பழக்கங்களான பயங்கரப் பாலைமணலில்
பாய்ந்து வறண்டு மறையவில்லையோ

எங்கே உள்ளத்தை நினது அருள் முடிவுற்றுப்
பரந்த சிந்தனையிலும் செயலிலும் ஈர்த்துச் செல்கிறதோ

அந்த சுதந்திர சுவர்க்கத்தில், எந்தையே !
என் நாடும் விழிப்புறுமாக.

— ரவீந்திரநாத் தாகூர்.

ஆர். கணேசன்.

Scanned by TapScanner

With the best compliments of

Indian Reinforcing CO. (Welded Mesh) Private Ltd.,

•

Manufacturers of

'Irc'

WELDED WIRE MESH

•

Office and Factory at :

No. 4, Mount-Poonamallee Road,
NANDAMBAKKAM, MADRAS-600 089.

Phone : 431989 * Telex : 041-7459 * Grams: "REINFORCE"

Scanned by TapScanner

பணக்காரர்கள்

இவர்கள் ஒன்றும்
இறைவனின்
Direct Appointment அல்ல.
இவர்கள் இன்றைய
ரிட்டையார்டு ஏழைகள்.

— ச. சே .....

மின்னல்

மேகக்கருங்கடலில்
நீந்தி மறைந்துவிட்ட
நட்சத்திர மீன்களை
பிடிப்பதற்கு
யார் போட்ட தூண்டிலிது ?

— ச. சேது .....

திருமணம்

மக்கள் தொகை
விஸ்தரிப்பின்
மாண்புமிகு
அடிக்கல் நாட்டு விழா.

— ச. சேதுரகு .....

தேர்தல் வாக்குறுதி

நெருப்பு ஆற்றுக்கு
மெழுகு பாலம்.
அந்த —
மெழுகு பாலத்தில்
யானை ஊர்வலம்.

— ச. சேதுரகுநா .....


நட்சத்திரங்கள்

வானவீதியின்
நிலவு முற்றத்தில்
யாரோ வரைய
நினைத்த கோலம்.
அதற்குள்
எதோ குடிமுழுகிவிட்ட
காரணத்தால்
கோடுகள் இழுக்கப்படாமல்
அனுதையாக்கப்பட்ட
அழகான
கோலப் புள்ளிகள்.

— ச. சேதுரகுநாதன்.

Scanned by TapScanner


8th College Day Celebration 11—4—1981




Athenaeum Chairman Welcomes.



Presidential Address.




Principal's Annual Report.



Municipal Commissioner Felicitates




Annual Day Address by Chief Guest.




Distribution of Degree Certificates.

Scanned by TapScanner


OUR DISTRICT PLAYERS




K. C. Ramaswami Raja, II B.Com.,
Basket Ball.



K. S. Rajagopal, I B.Com.,
Representative,
Basket Ball.



Albert Kirubakaran, III B.Com.,
Chess.



M. P. Karuppiah, II B.A.,
Hockey.

Scanned by TapScanner

இல. ஜோதிமுத்து.
இனம் வேதியியல் முதலாம் ஆண்டு.

அன்பே
உன்னைத்தான் அழைத்தேன்
நீ தரும்
பார்வை சுகங்களே — என்

பாடலின் ராகங்கள்.
பார்வை சுகத்திற்காகப்
பாதை ஓரத்திலே
காத்துக் கிடக்கிறேன்.

நீ தான்
பாராமுகமாய்ப் பறந்து செல்கிறாய்
விடியல் பொழுதில்
வீட்டு வாசலில்
நீ போடும்
புள்ளிக் கோலங்களே — எனது
பள்ளிப் பாடங்கள்.

வசந்தகால மலர்களில்
வாசமுள்ள ரோஜா நீ!
உன்னை ஆவலோடு
அணைக்கும் போதெல்லாம்
நீதான்
உனது முட்களால்
தடுத்து விடுகிறாய்.

புல்லாங் குழல்தேடி
மூங்கில் காட்டில்
அலைந்து திரிந்து
முடிவில் தான்
உன்னைக் கண்டேன்.

Scanned by TapScanner

இருந்தாலும் இன்றுவரை
இந்த வேலையில்லாக் கோவலர்களுக்கு
வாதாட
எந்தக் கல்விக் கண்ணகியும்
வராத காரணத்தால்
இங்கே
தீர்ப்புகள் வழங்கப்படாமலேயிருக்கின்றன.

சமுதாய முருங்கைமரத்தில்
சாசுவதமாகக் குடிகொண்டுவிட்ட
வேதாளம்தான்
வேலையில்லாத் திண்டாட்டம்.

எத்தனை விக்கிரமன்கள்
வேதாளங்களைச் சுமந்தாலும்
அவர்களால்
இந்த வேதாளத்தைப்
பாதாளத்தில் அமிழ்த்தவே முடியாது.

வழக்கம்போல்
வேதாளம் மீண்டும் மரம் ஏறிவிடும்.

ஏனென்றால்,
வேலை கிடைக்காத
இந்த வெட்டி சாம்ராச்சியத்தில்
வேதனை தாளாது
ஒரு சோதனையாய்
தனது மனிதப்பதவியை
தானே ராஜினாமா செய்த
ஒருவனின் ஆவிதான் சார்,
அந்த வேதாளம்?

● ● ●

Scanned by TapScanner

திரை அகராதி

ப. செல்லக்துரை,
இளங்கலை மூன்றும் ஆண்டு.

தியேட்டர் :- பொதுவாக இது ஒரு கொடவ்ன். அதாவது கிடங்கு என்று கூறப்படும்.

சென்சார் : தமக்குப் பிடித்தமான காட்சிகளை மற்றவர்கள் பார்க்கக்கூடாது என்று உரிமையுடன் கத்தரிக்கோல் ஆட்சி நடத்தும் குழு.

செய்திப் படம் : தலைவலி ஆரம்பமாகும் இடம். இந்த வலி அதிகநாள் மாறாமலும் இருக்கும்.

படத்தின் பெயர் : படத்தின் கடைசியிலோ அல்லது இடையிலோ யாராவது ஒருவரால் மூன்று முறை சொல்லப்படும். படத்தின் பெயருக்கும் கதைக்கும் பொருத்தமில்லாமல் செய்வது புதுமாதிரியான உத்தி.

பகல் காட்சி : கல்லூரி மாணவ, மாணவியரின் மத்தியான மடம்.

கதை வசனகர்த்தா: பல மொழி ஆராய்ச்சியாளர். சுயமாகவும் கொஞ்சம் சரக்குண்டு

ஸ்டுடியோ : கிண்டி ரேஸுக்குப் போட்டியாக ஏற்பட்டுப் பலரை ஓட்டாண்டி ஆக்கும் இடம்.

ரிசர்வ் டிக்கெட் : முன்னதாகவே பணத்தை விரயம் செய்யும் வழிக்கு ஒரு வசதி.

பெண்களுக்குத் தனி இடம் : } குழந்தைகளின் இன்னிசைகள் ஆரம்பமாகும் இடம். சில சமயங்களில் அற்புதமான சண்டைக்காட்சிகளைக்கூட இங்கு காணலாம்.

திரை : சிலர் உற்று உற்றுப் பார்க்கும் வெற்றிடம்.

விளக்கு : இதோ இருக்கிறது என்று சொல்லமட்டும்.

மின்விசிறி : பார்வைக்குமட்டும், ஓடினால் நிற்கும்; நின்றால் ஓடாது.

இடைவேளை : படம் முடிவதற்குள் வெளியில் ஓடுபவர்களுக்குத் தரப்படும் அவகாசம்.

ஆபரேட்டர் : சென்சார் விட்டுவைத்ததை வெட்டியும், ஒட்டியும் அடிக்கடி கொலை செய்யும் நபர்.

புதுப்படம் : இன்றே பாருங்கள் என்று கூறிவிட்டு அன்றே ஓடுவது.

இசைத்தட்டு : திரைக்குப் பின்னாலும், கொட்டகைக்கு வெளியேயும் நடக்கும் "காதராவி".

வசூல் : எல்லோரும் ஆவலுடன் எதிர்பார்ப்பது.

★★★

Scanned by TapScanner

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER—SANJEEVI RAJAPALAYAM RAJUS' COLLEGE MAGAZINE

To be published in the first issue of every year after last day of February

FORM IV (See Rule 8)

1. Place of Publication ... Rajapalayam

2. Periodicity of its publication ... Annual

3. Printer's Name ... P. A. Kumarasamy Raja
   Nationality ... Indian
   Address ... Jayaram Press, Tenkasi Road, Rajapalayam.

4. Publisher's Name ... Principal Dr. G. Venkatesan M.A.Ph.D.
   Nationality ... Indian
   Address ... Rajapalayam Rajus' College Rajapalayam.

5. Editor's Name ... Prof. S. Varadarajan M.A.M.Phil.,
   Nationality ... Indian
   Address ... Professor of English Rajapalayam Rajus' College Rajapalayam.

6. Name and address of individuals who own the newspaper and partners & shareholders holding more than one per cent of the total capital } Principal Rajapalayam Rajus' College Rajapalayam.

I, G. Venkatesan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated
24th March 1981

(Sd.) G. Venkatesan,
Signature of the Publisher.

Printed by
JAYARAM PRESS, RAJAPALAYAM.

Scanned by TapScanner

With Best Compliments From:

SRIRAM PRODUCTS
SRIRAM CHEMICAL COMPLEX
SRIRAM GELKEM INDS. P. LTD
GITANJALI MILLS LTD
PUSHPANJALI INDS. P. LTD

Chairman :

P. K. RAMASAMY RAJA

(Srirams Group of Industries)

Grams : **SRIRAMS**

Phone : Off : 2443, 2669, 2065, 2269

Res : 2870 & 2491

Registered Office :

36, SRIRAM NAGAR

P. B. No. 29

RAJAPALAYAM-626 117

S. INDIA

Scanned by TapScanner

Phone : { 2589 Off.
2217 Resi.

SARAVANA ELECTRICALS

32, MUDANGIAR ROAD,

RAJAPALAYAM - 626 117.

★

Dependable House of Everything in Electricals



AUTHORISED DEALERS IN :

Bajaj Lamps, fittings, Fans & Mix.
Philips Lamps & Fittings
Crompton Lamps & Fittings
Ralli Table & Ceiling Fans
Orient Table & Ceiling Fans
Khaitan Fans
Nova Fans
Anchor Electrical Goods
Standard Switchgears & H. R. C. Fuse links
Wet Grinder

DEALERS :

Bajaj Switches
LT LK Switchgears
Bosma Switchgears
Finolex Cables
Underground Cable All Sizes
Dowells Cable End Sockets
Essen Electrical Control Accessories
Vijay Irons & Fans.

Prop: P. R. SANJEEVI RAJA.

Jayaram Press, Rajapalayam.

Scanned by TapScanner